குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 45/2019

அ.சா. 04

2023–ம் ஆண்டு டிசம்பர் 28 –ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 04 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவி | ஜாதி | |
| தந்தை பெயர் | கோவிந்தன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.55 மணி,

Accused Ajith absent. Petition U/s. 317 CrPC filed and allowed. Advocate Mr.Balu present for Mr.P.Kathiravan for accused.APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தீவட்டிப்பட்டியில் குடியிருந்து கொண்டு கறிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். தளவாய்பட்டி அருகே எலத்தூர் என்ற இடத்தில் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்ததாக கேள்வி பட்டேன். அந்த வழியாக நான் சென்றபோது போலீசார் அங்கு சம்பவம் நடந்த இடத்தில் இருந்தார்கள். விபத்து நடந்தது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் மற்றும் நபர்கள் குறித்த விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 04.03.2018 ம் தேதி மாலை 05.30 மணியளவில் சேலம் – தர்மபுரி சாலையில் தளவாய்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே TN 30 BX 5977 என்ற Hero passion pro என்ற இருசக்கர வாகனத்தில் மாயக்கண்ணன் என்பவர் ஓட்ட கீர்த்தனா பின்னால்

அமர்ந்து கொண்டு சென்ற போது அவர்களுக்கு எதிரே அதே சாலையில் ஒரு வழி பாதையில் எதிரி TN 34 R 714 என்ற பதிவு எண் உடைய பல்சர் இருசக்கர வாகனத்தை ராங் சைடில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மாயக்கண்ணன் மற்றும் கீர்த்தனா ஆகியோர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக போலீசார் விசாரித்த போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**: இல்லை.

விசாரணை முடிந்த நேரம் : 02.03 மணி

ஓம்/-எஸ்.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.